# ஆதிதிராவிட மக்களுக்கு மனைப்பட்டா வழங்காததை கண்டித்து தொடர் காத்திருப்பு போராட்டம்



▶ விழுப்புரத்தில் காரல் மார்க்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆதிதிராவிடர் மக்களுக்கு மனைப்பட்டா வழங்காததை கண்டித்து புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள நகராட்சி திடலில் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**விழுப்புரம், ஜூன் 10:** இந்திய காரல் மார்க்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆதிதிராவிட மக்களுக்கு மனைப்பட்டா வழங்காததை கண்டித்து, தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள நகராட்சி திடலில் நேற்று காலை 11 மணியளவில், இந்திய காரல் மார்க்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆதிதிராவிட மக்களுக்கு மனைப்பட்டா வழங்காததை கண்டித்து தொடர் காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது. போராட்டத்திற்கு விழுப்புரம் கிழக்கு மாவட்ட செயலாளர் குருதேவன் தலைமை தாங்கினார். மாநிலத் தலைவர் பாலமுருகன் கண்டன உரையாற்றினார். மாவட்ட துணை செயலாளர் ஜெயகாந்தன், மாநிலக்குழு உறுப்பினர்கள் நாகப்பன், சங்கர், விமல், சிவா(எ)சுந்தரி, செங்கேணி, மான்விழி, ஒன்றிய செயலாளர் செல்வி, நகர செயலாளர் சத்தியவாணி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். போராட்டத்தில் விழுப்புரம் மாவட்டம் வளவனூர் பேரூராட்சிக்குட்பட்ட பக்கமேடு, வாணி சத்திரம், கண்டமங்கலம் ஒன்றியம் அற்பிசம்பளையம் ஊராட்சிக்குட்பட்ட ஆலங்குப்பம் கிராமங்களில் ஆதிதிராவிட மக்கள் 2022 ஆண்டிலிருந்து கொடுத்த மனுவின் மீது நடவடிக்கை எடுக்காத மாவட்ட நிர்வாகம் மற்றும் வருவாய் துறையினரை கண்டித்து மனைப்பட்டா வழங்கும் வரை கோஷங்களை எழுப்பியவாறு தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### சின்னசேலம் அருகே

# காற்று, மழையால் முறிந்து விழுந்த மரக்கிளைகள்

## போக்குவரத்து கடும் பாதிப்பு



**சின்னசேலம், ஜூன் 10:** கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் அருகே நேற்று மதியம் பெய்த பலத்த காற்று, மழையால் மரக்கிளைகள் முறிந்தும், சாய்ந்தும் சாலையில் விழுந்ததால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கச்சிராயபாளையம், சின்னசேலம் உள்ளிட்ட பகுதியில் நேற்று காலை வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. அதன் பிறகு காலை 8 மணிக்கு மேல் வெயில் வழக்கம்போல் வெளுத்து வாங்கியது. ஆனால் பிற்பகல் 2 மணிக்கு மேல் வானம் இருள் சூழ்ந்து கருமேகமாக மாறியது. மேலும் மேகமூட்டத்துடன் மழைக்கான அறிகுறிகள் தென்பட்டது. இந்நிலையில் சின்னசேலம் அருகே கனியாமூர் கூட்ரோட்டில் இருந்து நமச்சிவாயபுரத்துக்கு இடையில் பலத்த காற்றுடன் திடீர் மழை பெய்ய தொடங்கியது. அதாவது மணிக்கு சுமார் 40 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசியதால் சாலையோரம் இருந்த 10க்கும் மேற்பட்ட இடங்களில் மரங்கள் சாய்ந்தும், கிளைகள் முறிந்தும் விழுந்தன. அதைப்போல சில வீடுகளில் மேலிருந்த தகரசீட்டுகள் காற்றில் பறந்தன. ஆனால் பாதிப்பு யாருக்கும் ஏற்படவில்லை. இதனால் அந்த சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மேலும் நமச்சிவாயபுரம், பங்காரம் உள்ளிட்ட கிராமங்களில் தெருக்களில் மழைநீர் தேங்கி நின்றது.

இதுகுறித்து தகவலறிந்த சமூக ஆர்வலர்களும், மின்வாரிய துறையினரும் மழையை கூட பொருட்படுத்தாமல் சம்பவ இடத்துக்கு சென்று சாய்ந்திருந்த மரக்கிளைகளை வெட்டி அப்புறப்படுத்தினர். அதைப்போல மின்கம்பங்களின் மேல் சாய்ந்திருந்த மரங்களையும் வெட்டி அப்புறப்படுத்தினார். இதையடுத்து போக்குவரத்து சீரானது. மேலும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுவதால் கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர் இன்று இரவு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.




# முருகன் கோயில்களில் வைகாசி விசாக சிறப்பு வழிபாடு



▶ சிறப்பு அலங்காரத்தில் வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமி.

**ரிஷிவந்தியம், ஜூன் 10:** வைகாசி விசாகத்தை முன்னிட்டு ரிஷிவந்தியம், வாணாபுரம் பகுதி முருகன் கோயில்களில் நடைபெற்ற சிறப்பு வழிபாட்டில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியத்தில் சுமார் 1500 ஆண்டுகள் மிகப் பழமை வாய்ந்த முத்தாம்பிகை சமேத அர்த்தநாரீஸ்வரர் கோயில் உள்ளது. இக்கோயிலில் வள்ளி, தெய்வானையுடன் சுப்பிரமணிய சுவாமிக்கு தனி சன்னதி உள்ளது. இந்நிலையில், முருகப்பெருமான் அவதரித்த நாளாகக் கருதப்படும் வைகாசி விசாகத்தை முன்னிட்டு சிறப்பு பூஜை நேற்று நடைபெற்றது. இதையொட்டி வள்ளி, தெய்வானையுடன் சுப்பிரமணிய சுவாமிக்கு இளநீர், பால், தயிர், சந்தனம், தேன், பஞ்சாமிர்தம், விபூதி உள்பட பல்வேறு வாசனை திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து மகா தீபாராதனை நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு பக்தி பரவசத்தில் முருகனுக்கு அரோகரா, கந்தனுக்கு அரோகரா, வேலனுக்கு அரோகரா, ரிஷிவந்தியம் சுப்பிரமணிய சுவாமிக்கு அரோகரா என கோஷமிட்டு வழிபட்டனர். இதில் கட்டளைதாரர்கள் ரிஷிவந்தியம் தயாபரன், அர்ச்சகர்கள் நாகராஜ் குருக்கள், சோமு குருக்கள், எழுத்தர் விமல்ராஜ், கமல்தாஸ் உள்ளிட்ட அதிகாரிகள் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

### தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தினர்

# பொது பாதையை ஆக்கிரமித்துள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி மனு



▶ விழுப்புரத்தில் தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கம் சார்பில் வானூர் அருகே உள்ள புதுகுப்பம் ஊராட்சியில் பொது பாதையை ஆக்கிரமித்துள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுக்க வந்தனர்.

**விழுப்புரம், ஜூன் 10:** விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் குறைகேட்பு கூட்டத்தில் தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தின் மாநில செயலாளர் அய்யனார் தலைமையில் மனு கொடுத்தனர். அம்மனுவில் கூறியிருப்பதாவது: வானூர் தாலுகா புதுக்குப்பத்தில் 100க்கும் மேற்பட்ட ஆதிதிராவிட மக்கள் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு மயானம் இல்லாமல் புதுக்குப்பம் கிராம மக்கள் அமைத்த பழத்தோட்டத்தில் மயான காரியங்கள், ஈமச்சடங்குகள், எரித்தல் போன்றவற்றை செய்து வருகிறார்கள். பழத்தோட்டத்தை ஆக்கிரமித்து இது போன்ற காரியங்களை செய்து வருகின்றனர்.

இந்த பழத்தோட்டத்திற்கு அருகில் 50 சென்ட் அளவில் அரசு இடம் இருப்பதால் அந்த இடத்தில் அவர்களுக்கு சுடுகாடு அமைத்துத்தர வழிவகை செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம். அதேபோல் செஞ்சி தாலுகா பொன்பத்தி கிராமத்தில் விவசாயம் செய்வதற்கும், இடுபொருட்களை கொண்டு செல்லவும், விளைபொருட்களை வெளியே கொண்டு வருவதற்கும் அரசு புறம்போக்கு இடத்தை பயன்படுத்தி வந்தோம். தற்போது அந்த இடத்தை சிலர் ஆக்கிரமிப்பு செய்துகொண்டு விவசாயிகளுக்கு வழிவிடாமல் தடுத்து வருகின்றனர். எனவே, அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி சாலை வசதி செய்து தர வேண்டுமென அம்மனுவில் கூறியிருந்தனர். இம்மனுவின் மீது மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் வரும் நாட்களில் விவசாயிகள் பாடை கட்டி போராட்டம் நடத்துவோம் என தெரிவித்தனர்.

# கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா



▶ உளுந்தூர்பேட்டையில் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணியினருக்கு நகரமன்ற துணை தலைவர் வைத்தியநாதன், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் டேனியல்ராஜ் ஆகியோர் கேடயம் மற்றும் பரிசுகளை வழங்கி பாராட்டினர்.

**உளுந்தூர்பேட்டை, ஜூன் 10:** கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை நகர இளைஞரணி சார்பில் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதியின் 102வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் உளுந்தூர்பேட்டை மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து வந்த கிரிக்கெட் அணியினர் கலந்து கொண்டு விளையாடினர். இதில் வெற்றி பெற்ற அணிகளை சேர்ந்தவர்களுக்கு உளுந்தூர்பேட்டை நகரமன்ற துணை தலைவர் வைத்தியநாதன், மாவட்ட திட்ட குழு உறுப்பினர் டேனியல்ராஜ் ஆகியோர் கேடயம் மற்றும் பரிசுகளை வழங்கி பாராட்டினர். இந்நிகழ்ச்சியில் நகரமன்ற உறுப்பினர் மனோபாலன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### திண்டிவனம் அருகே

# கிளீனராக சென்று லாரியின் முன் படுத்து உறங்கிய பள்ளி மாணவன் லாரி ஏறி பலி



▶ அன்புமணி

**திண்டிவனம், ஜூன் 10:** திண்டிவனம் அய்யந்தோப்பு பகுதியை சேர்ந்தவர் மணிகண்டன் மகன் அன்புமணி (17). இவர், திண்டிவனம் காவேரிப்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 12ம் வகுப்பு படித்து வந்தார். இவர் ஓய்வு நேரங்களில் லாரியில் கிளீனராக பணிபுரிந்து வந்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை பட்டணம் பகுதியை சேர்ந்த மணி (35) என்பவருடன் ஜல்லி லோடு ஏற்றிக்கொண்டு சாரம் கிராமத்தில் லோடு இறக்க உடன் சென்றுள்ளார். அப்போது லோடு இறக்கும் இடத்தை உரிமையாளர் சொல்லாததால் அவருக்கு ஓட்டுநர் மணி போன் செய்தபோது போனையும் எடுக்காததால் அதிகாலை 5 மணியளவில் சாரம் ரெயின்போ சிட்டி அருகே உள்ள இறக்கத்தில் லாரியை நிறுத்தி விட்டு ஓட்டுநர் மணி இயற்கை உபாதைக்காக சென்றுள்ளார். இந்நிலையில் அசதியில் இருந்த கிளீனர் அன்புமணி லாரியின் முன் படுத்து தூங்கியதாக கூறப்படுகிறது. இந்நிலையில் லாரி அதிக பாரம் காரணமாக இறக்கத்தில் நகர்ந்து ஓடியுள்ளது. இதில் லாரி முன் படுத்து தூங்கிய அன்புமணி மீது லாரி ஏறி உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தார். இந்நிலையில் திரும்பி வந்து பார்த்த மணி அதிர்ச்சியடைந்து தப்பிச் சென்றதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து ஒலக்கூர் போலீசார் வழக்குப்பதிந்து இறந்த அன்புமணியின் உடலை கைப்பற்றி பிரேதபரிசோதனைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆலோசனை கூட்டம்



▶ விழுப்புரத்தில் கம்பன் கழகத்தின் 42ம் ஆண்டு விழாவை முன்னிட்டு ஆலோசனை கூட்டம் நடந்தது.

**விழுப்புரம், ஜூன் 10:** விழுப்புரத்தில் கம்பன் கழகத்தின் 42ம் ஆண்டு விழாவை 3 நாட்கள் நடத்துவது தொடர்பாக ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு விழுப்புரம் கம்பன் கழக தலைவர் தனபால் தலைமை வகித்தார். துணை தலைவர் செந்தில், பொருளாளர் வேங்கடவரதன், துணை செயலர் பரமசிவம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழா குழு உறுப்பினர்கள் காங்கேயன், ஐயப்பன், அன்பழகன், பாஸ்கரன், ராமமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர்.

கூட்டத்தில், விழுப்புரம் கம்பன் கழக 42ம் ஆண்டு விழாவை ஆகஸ்ட் 1, 2, 3 ஆகிய தேதிகளில் நடத்துவது, முதல் நாள் தொடக்க விழாவுக்கு ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை அழைப்பது, தொடர்ந்து பேராசிரியர் அப்துல் காதரை உரையாற்ற அழைப்பது, இரண்டாம் நாள் நிகழ்வில் திருக்கோவிலூர் ஜீயர்ஸ்ரீ உ.வே. தேகளீச ராமானுஜாச்சாரியர் சுவாமிகளை அருளுரை வழங்கவும், புலவர் ராமலிங்கத்தை நடுவராக கொண்டு சிந்தனை அரங்கத்தை நடத்துவது என்றும், 3ம் நாளில் நடைபெறும் பட்டிமன்றத்துக்கு பேராசிரியர் சாலமன் பாப்பையா, ராஜா ஆகியோரை அழைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

மேலும் கம்பன் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள் என்ற தலைப்பில் பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டிகளை நடத்துவது, சிறந்த தமிழறிஞர்கள் 3 பேருக்கு கவுரவித்து விருது வழங்குவது என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பொது அறிவிப்பு

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், புல்லூர் கிராம அ.பு.ரி.சர்வே எண்: 225/1–1.68 செண்ட் சுப்பரமணியன் குமாரர் ராஜாராம் என்பவருக்கு பாத்தியமான சொத்தை தூத்துக்குடியை சார்ந்த வின் பவுன்டேஷன் நிறுவனம் கிரயம் பெற இருப்பதால் சொத்தில் ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் கீழ்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்கலாம்.

**G.S.முருகன்**, M.A., B.L.,
வழக்கறிஞர்
நெ. 27/1A, அன்னை சத்யா தெரு,
உளுந்தூர்பேட்டை. செல்: 9952748956

**க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்**
(முன்னர் பூனாவாலா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட். என அறியப்பட்டது)

பதிவு அலுவலகம்: 6-வது தளம், B கட்டடம், கங்கா ட்ரூனோ, லோஹிகான், புனே, மகாராஷ்டிரா 411014. கிளை அலுவலகம் அலகு: 2வது தளம், டிகேஎஸ் டவர்ஸ், எண்.P/1/45/4, தேனி - கம்பம் பிரதான சாலை, TNEB எதிரில், பழனிச்செட்டிப்பட்டி, தேனி மாவட்டம், தேனி, தமிழ்நாடு - 625531

**மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை**

**பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 & 9-ன் கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.**

இங்கே உள்ள அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் (முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது (முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று அறியப்பட்டது முன்னர் GE மணி ஹவுசிங் பைனான்ஸ் பப்ளிக் அன்லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) (இதற்குப்பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 பிரிவு 13(12)–ன் படியும், கடனீட்டு சொத்துகளின் உரிமை (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 & 9–ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார்.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 26/06/2025 அன்று மின்–ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன்மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்துகொள்ள GHFL's/ கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com–ஐ பார்வையிடவும்.

| வ. எண். | முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A) | கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B) | சுவாதீன தன்மை (C) | சொத்தின் விவரம் (D) | நிர்ணய விலை (E) | முன்வைப்புத் தொகை (நி.வி.-ல் 10%) (F) | முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G) | ஏல உயர்வுத் தொகை (H) | சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I) | ஏலத் தேதி மற்றும் நேரம் (J) | தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | கடன் எண். HF0125H21100034 R சரத்பாபு (கடன்தாரர்), வனிதா (உப கடன்தாரர்) | அறிவிப்பு தேதி: 27/08/2024 மொத்த நிலுவை: 27/08/2024 தேதிப்படி செலுத்த வேண்டிய தொகை ரூ.2789431.2/– (ரூபாய் இருபத்தேழு லட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து நானூற்று முப்பத்தொன்று மற்றும் இருபது பைசா மட்டும்) மற்றும் தொகையைச் செலுத்தும் வரையிலான ஆண்டுக்கு @17% வட்டி உட்பட. | கையக | விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் தாலுகா, விழுப்புரம் பதிவு மாவட்டம், வளவனூர் சார்பதிவு மாவட்டம், சிறுவந்தாடு கிராமம், சிறுவந்தாடு கிராம ஊராட்சி எல்லைகள், கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியம், ஈஸ்வரன் கோயில் தெருவைச் சேர்ந்த நிலத்தின் கிராம நத்தம் சர்வே எண் 355/1, **இனம் எண் 1: அளவீடு:** கிழக்கு மேற்காக இரண்டு பக்கமும் 4 அடி, தெற்கு வடக்காக இரண்டு பக்கமும் 25 அடி, மொத்தப் பரப்பளவு 100 சதுர அடிக் கொண்ட சந்து மனை. **எல்லைகள்:** ரங்கா அம்மாள் மனைக்குக் **கிழக்கில்,** ருக்மணியம்மாள் அவர்களின் மனைக்கு மேற்கில், ஈஸ்வரன் கோயில் தெருவுக்குத் தெற்கில், காலி மனைக்கு வடக்கில். **இனம் எண் 2: அளவீடு:** கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் 20 அடி, தெற்குப் பக்கம் 40 அடி, தெற்கு வடக்காக இரண்டு பக்கமும் 25 அடி, மொத்தப் பரப்பளவு 750 சதுர அடிக் கொண்ட காலி மனை. **எல்லைகள்:** ஜானகிராமன் மனைக்குக் **கிழக்கில்,** ருக்மணியம்மாள் அவர்களின் மனைக்கு **மேற்கில்,** ரங்கம்மாள் மற்றும் பத்மாவதியம்மாள் ஆகியோரின் மனைக்குத் **தெற்கில்,** கீழே குறிப்பிட்டுள்ள காலி மனைக்கு **வடக்கில். இனம் எண் 3:** அளவீடு: கிழக்கு மேற்காக இரண்டு பக்கமும் 30 அடி, தெற்கு வடக்காக இரண்டு பக்கமும் 36–1/2 அடி, மொத்தப் பரப்பளவு 1095 சதுர அடிக் கொண்ட காலி மனை. எல்லைகள்: ஜானகிராமன் மனைக்குக் **கிழக்கில்,** ருக்மணியம்மாள் அவர்களின் மனைக்கு **மேற்கில்,** ரங்கம்மாள் மற்றும் பத்மாவதியம்மாள் ஆகியோரின் மனைக்குத் தெற்கில், கீழே குறிப்பிட்டுள்ள காலி மனைக்கு வடக்கில். இனம் எண் 3: அளவீடு: கிழக்கு மேற்காக இரண்டு பக்கமும் 30 அடி, தெற்கு வடக்காக இரண்டு பக்கமும் 36–1/2 அடி, மொத்தப் பரப்பளவு 1095 சதுர அடிக் கொண்ட காலி மனை. எல்லைகள்: திருமலை ரெட்டியார் மனைக்குக் கிழக்கில், ருக்மணியம்மாள் அவர்களின் மனைக்கு மேற்கில், மேலே குறிப்பிட்டுள்ள காலி மனைக்குத் தெற்கில், திருமலை ரெட்டியார் மனைக்கு வடக்கில். மொத்தப் பரப்பளவு பாதி பாகம் 1845 சதுர அடி + 100 சதுர அடி சந்துக்கானது. | Rs. 32,77,505/- (ரூபாய் முப்பத்திரெண்டு லட்சத்து எழுபத்தேழாயிரத்து ஐநூற்று ஐந்து மட்டும்) | Rs. 327750.5/- (ரூபாய் மூன்று லட்சத்து இருபத்தேழாயிரத்து எழுநூற்று ஐம்பது மற்றும் பைசா ஐம்பது மட்டும்) | 25/06/2025 Before 5 PM | 10,000/- | 19/06/2025 (11AM – 4PM) | 26/06/2025 (11 AM- 2PM) | ஏதுமில்லை |

**ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/ கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச் சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்துகொள்ள அருகில் உள்ள கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்துவரி, மின்சாரம்/ வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.**
ஆர்வமுள்ள ஏலதாரர்கள் பயனாளர் அடையாள முகவரி, கடவுச்சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிட்., முகவரி: மனை எண்–68, 3ஆவது தளம், குர்கான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, **தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண். 9948182222** மூலமாகவோ தொடர்புகொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக "க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிட்." வங்கிக் கணக்கில், ICICI BANK LTD, கணக்கு எண்–000651000460 மற்றும் IFSC Code– ICIC0000006, 20, R.N.முகர்ஜி சாலை, கொல்கத்தா–700001 என்ற கிளையில் செலுத்தத்தக்க விதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது அட்டவணை வங்கியிலோ **25/06/2025 தேதி** அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் பெயரை முன்னதாகவே பதிவுசெய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச்சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூலப் பிரதியை **எண்.1510. 2வது தளம், ஸ்ரீ காம்ப்ளெக்ஸ், திருச்சி ரோடு, கோயம்புத்தூர், தமிழ்நாடு – 641018** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேலும் கைபேசி எண். +91 9597907666 மின்னஞ்சல் முகவரி baskaran.soundarrajan@grihumhousing.com–ல் தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்துகொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

**கடனீட்டு சொத்துகளின் உரிமை (அமலாக்கம்) சட்டம்-2002-ன் விதி 8(6)-ன் கீழ் கடன்தாரர்/ உப கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 15 நாள்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.**

தேதி: 10.06.2025, இடம்: தமிழ்நாடு — ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிட்., என்றறியப்பட்டது)